நாள் - 09.07.2026.

O.S. No. 337/2022,

P.W. 1 - தங்கம்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>

1. 1-ம் பிரதிவாதி தாணுப்பிள்ளையின் வீடு வழக்கிடை சொத்தில் விவரிக்கப்பட்டுள்ள எந்த பாகத்தில் காணப்படுகிறது என்றால் பாகமாக எனக்கு தெரியவில்லை. ஆனால் 60 செண்ட் வீட்டடி நிலத்தில் ஒரு பாகமாக 1-ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார்.

2. முதலாம் பிரதிவாதியுடைய வீடு வீட்டடி சொத்திலோ அது எங்கு உள்ளது என்று நான் எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரி.

3. நான்காம் பிரதிவாதியுடைய வழக்கிடை சொத்தில் விவரிக்கப்பட்டுள்ள எந்த பாகத்தில் காணப்படுகிறது என்றால் வீட்டடி சொத்தில் அல்ல வேறு சொத்தான 65 செண்ட் நிலத்தில் ஒரு பாகமாக உள்ளது.

4. வழக்கிடை சொத்தில் அவ்வாறு வீடு கட்டியுள்ள விவரத்தை நான்காம் பிரதிவாதி கட்டியுள்ளதை நான் விவரிக்கவில்லை என்றால் சரி. நான் வழக்கு தாக்கல் செய்த தேதியில் அவர் அங்கு வீடு கட்டவில்லை.

5. நான் பாகமாக கோரியுள்ள சொத்தில் நான்காம் பிரதிவாதி கட்டியுள்ள வீடு உள்ளது என்றால் என்னிடம் கேட்காமல் என்னுடைய அனுமதியோ அல்லது எனக்கு தெரியாமல் அந்த சொத்தை விற்றுள்ளார்கள்.

6. நான்காம் பிரதிவாதி என்னுடைய குடும்பத்தின் உறுப்பினோரோ சொந்தமோ இல்லை என்றால் சரி.

7. எதற்காக நான்காம் பிரதிவாதி இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டார் என்றால் எனது சகோதரர் தாணுப்பிள்ளை சுபாஷ் இருவரும் வழக்கிடை சொத்தின் ஒரு பகுதியை நான்காம் பிரதிவாதிக்கு விற்றுள்ளதால் நான் அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன்.

8. முதலாம் மற்றும் இரண்டாம் பிரதிவாதிகள் நான்காம் பிரதிவாதிக்கு விலையாக வழக்கிடை சொத்தின் ஒரு பகுதியை கொடுத்ததற்கு நான் அவ்வாணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆனால் எனக்கு விற்பனை செய்ததது பின்னிட்டு தான் தெரியும்.

9. அவ்வாறு விற்பனை செய்த சொத்துகள் மற்றும் சொத்துகளுடைய அளவு மற்றும் விஸ்தீரணத்தை சரியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் என்னால் நீதிமன்றத்தில் பரிகாரம் கோர முடியாது என்றால் சொத்துகள் சார்ந்து எனக்கு தெரிந்த விவரங்களை கொண்டு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

10. 3-ம் பிரதிவாதியின் கணவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் என்றால் சரி.

11. அவர் வழக்கு தாக்கல் செய்த பிறகு அவர் என்னிடத்தில் பேசியுள்ளார் என்றால் சரி.

12. அவ்வாறு பேசிய பொழுது நான் அவரிடத்தில் அவருக்கு விற்பனை செய்யப்பட்ட சொத்தில் நான் உரிமை கோரமாட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது சகோதரர்கள் இருவர் தான் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வேண்டிய சொத்தில் 3-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்தில் கணக்கீட்டு வாங்கி தருவதாக சொன்னார்கள்.

13. அவர் எனது சகோதரர்களையும் என்னையும் கூட்டாக வைத்து பேச்சு வார்த்தை எதுவும் நடத்தவில்லை என்றால் சரி.

14. எனது உடன் பிறந்த சகோதரி கீதாஞ்சலிக்கு எனது தந்தை உயில் சாசனத்தில் மூலமாக எழுதிக் கொடுத்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 10 செண்ட் நிலமாகும்.

15. கீதாஞ்சலிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்து எந்த பகுதியில் உள்ளது என்றால் வீட்டடியாக உள்ள நிலத்தில் அந்த 10 செண்ட் உள்ளது.

16. எனது சகோதரர் 2-வது பிரதிவாதியான சுபாஷ்க்கு வழக்கிடை சொத்தில் வீடு எதுவும் இல்லை என்றால் சரி. அவர் அவருடைய மாமனார் வீட்டில் தமாசித்து வருகிறார் என்றால் சரி.

17. எனது சகோதரர்கள் இருவரும் வழக்கிடை சொத்தில் செய்துள்ள அபிவிருத்திகளை பற்றி நான் இவ்வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு ஏதும் சொத்தில் பெரிதாக அபிவிருத்தி செய்யவில்லை. அதில் சிறியதாக ஒரு வீடு மட்டும் கட்டியுள்ளார்கள்.

18. அவ்வாறு கட்டப்பட்ட வீடு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.அந்த வீடு பொதுவாக கட்டப்பட்ட வீடாகும். நான் அவ்வாறு பொதுவாக கட்டப்பட்ட வீடு என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் ஒரு சொத்தை விற்பனை செய்வதற்கு நானும் கையொப்பமிட்டேன். அதில் வந்த தொகையை கொண்டு வீடு கட்டப்பட்டது.

19. பொதுவாக வீடு கட்டப்பட்ட விவரத்தை என்னுடைய பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரி.

20. முதலாம் பிரதிவாதி சொந்த உழைப்பில் கட்டப்பட்ட வீடு என்றால் இல்லை. அவர் எந்த வேலையும் செய்யவில்லை. அவரிடத்தில் பணம் ஏதும் இல்லை. அவர் என்னிடம் அவ்வப்பொழுது பணம் வாங்குவார்.

21. அவர் சொந்தமாக ஆட்டோ வைத்து சவாரி தொழில் செய்து வருகிறார் என்றால் தற்போது தான் அந்த தொழில் செய்து வருகிறார்.

22. எனது சகோதரர் எனது பெற்றோர்களை தெய்வமாக பாவித்து அவர்களுக்கு தேவயைான அனைத்து விஷயங்களையும் செய்து வந்தார் என்றால் இல்லை. அவர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களிடத்தில் சொத்து சம்மந்தமாக விற்பனை செய்ய வேண்டும் என்று சண்டையிட்டு வந்தார்.

23. எனது பெற்றோர்கள் இருவரும் புற்றுநோயால் எவ்வளவு ஆண்டு அவதிப்பட்டார்கள் என்றால் அவர்கள் இருவரும் ஓர் ஆண்டு அவதிக்கு ஆளானார்கள்.

24. எனது பெற்றோர்கள் காலகட்டத்தில் அவர்கள் எனக்கு எந்த வித உபத்திரமும் செய்யவில்லை என்றும் மாறாக எனக்கு நன்மை செய்தார்கள் என்றால் சரி. அவர் எனக்கு உயில் மூலமாக 13 செண்ட் நிலத்தை கொடுத்தார்.

25. என்னுடைய பெற்றோர்கள் எனக்கும் எனது சகோதரிக்கும் உயில் மூலமாக சொத்தில் ஒரு பகுதியை எழுதிக் கொடுத்தது போல் எனது சகோதரர்களுக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரி. எனது சகோதரி கீதாஞ்சலி கணவரோடு வாழாமல் பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வந்ததால் அவருக்கு அனுகுலம் செய்ய ஒரு 10 செண்டும் அதே போல் நான் அவர்களுடைய புற்றுநோய் சிகிச்சையை பார்த்து கொண்டதால் சொத்தில் ஒரு பகுதியை உயில் சாசனமாக எழுதிக் கொடுத்தார். உண்மையில் என்னை தான் முன்நின்று சொத்துகளை பாகம் பிரிக்க சொல்லி அவர் என்னிடத்தில் அறிவுறுத்தினார்.

26. எனது தந்தை எப்பொழுது காலமானார் என்றால் 30 ஆண்டுகளுக்கு முன் அவர் காலமானார்.

27. எனது தந்தை உயில் எழுதிக் கொடுத்த தேதியில் அவர் நல்ல உடல்நிலையில் இருந்தார் என்றால் இல்லை அவர் அப்பொழுது புற்றுநோயால் அவதிப்பட்டிருந்தார்.

28. எனது தந்தை சொத்துகளை பிரித்து தர வேண்டும் என்ற நோக்கத்தோடு சகோதரிகள் இருவருக்கும் உயில் சாசனம் மூலமாகவும் ஒரே நாளில் சொத்துகளை எழுதி வைத்தார் என்றும் அதே போல் சகோதரர்களுக்கு வாக்கால் பாத்தியம் எழுதிக்

கொடுக்க வேண்டும் என்ற நோக்கோடு அவர் முன்னெடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் ஏதும் பிரிக்கப்படவில்லை.

29. பிரதிவாதிகளும் நானும் சொத்துகளை விற்பனை செய்த பிறகு என் பெயரில் விருதுநகரில் அசையா சொத்து வாங்கப்பட்டது என்றால் இல்லை.

30. எனது கணவர் பெயரில் அவ்வாறு சொத்துகள் வாங்கப்பட்டது என்றும் அவர் அந்த சொத்தை விற்பனை செய்து விட்டார் என்றால் சரியல்ல.

31. எனது கணவருக்கும் அவருடைய முதல் தாரத்தின் மூலமாக பிறந்த மகனுக்கும் நிலவி வந்த சொத்து சார்ந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக வழக்கிடை சொத்தின் ஒரு பகுதியை விற்று பணத்தை கொண்டு பிரச்சனை தீர்த்து வைத்தார்கள் என்றால் சரியல்ல.

32. நான் இந்த வழக்கில் எனது தந்தையின் அனைத்து சொத்துகளையும் நான் பட்டிகை சொத்தாக இணைத்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் அதே போல் எனது சகோதரிக்கும் எனக்கும் திருமணமான தேதியில் திருமண செலவிற்காக விற்பனை செய்யப்பட்ட சொத்தின் விவரங்களையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றும் வழக்கிடை சொத்தின் விவரங்களை சரிவர நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

33. எனது சகோதரர்கள் இருவரும் பல இலட்சங்கள் எனது பெற்றோர்கள் இருவரையும் பார்த்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

34. எனது பெற்றோர் காலத்திற்கு பின் எனது சகோதரர்கள் இருவரும் வாக்கல் பாகம் கிடைத்த சொத்தை கொண்டு அதில் பாதை அமைத்து கட்டடங்கள் கட்டி, மரங்கள் நட்டு வளர்த்து அமைதியாக வாழும் சூழலில் அவர்கள் அமைதியை கெடுப்பதற்காகவும் அவர்களை கஷ்ட நஷ்டபடுத்துவதற்காகவும் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை ஏதும் இல்லை.

மேற்கண்ட குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் 1,2 மற்றும் 4 தரப்பில் செய்யப்பட்டது. மூன்றாம் பிரதிவாதி தரப்பில் இச்சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு 28.07.2026 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open court and read over/interpreted by Clerk **Tmt. S. Shiney Jenifer** to the deponent and acknowledged by him/her to be correct on Thursday the 9th day of July 2026.

Additional District and Sessions Judge,
Padmanabhapuram.